வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    01.01.2025 புதன்கிழமை    இதழ் : 01    பக்கங்கள் : 12

# புலிகளால் மகிந்தவுக்கு உயிர் ஆபத்து இல்லை!

## அவர்களுடன் நெருங்கிய உறவையே பேணியிருந்தார் என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜனவரி 01

**விடுதலைப் புலிகளால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இல்லை என பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்துள்ளார்.**



மகிந்த ராஜபக்ஷவின் மீது புலிகளுக்கு எந்தவொரு வைராக்கியமும் இல்லை. போர் இடம்பெற்ற தருணத்திலும் அவருக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ மீது குண்டுத் தாக்குதலை நடத்தவோ அல்லது வேறு விதமான தாக்குதலை நடத்தவோ எந்தவொரு தீவிரவாதியும் முற்பட்டிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் 11

## மண்ணெண்ணெய் விலை குறைப்பு

கொழும்பு, ஜன. 01

நேற்று நள்ளிரவு 12 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகள் தொடர்பான அறிவிப்பை இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ளது.

இதன்படி மண்ணெண்ணெய் விலை 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 183 ரூபாவாகும். அத்துடன் மற்ற எரி பொருள் விலையில் மாற்றம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சிவப்பரிசி தட்டுப்பாட்டுக்கு விரைவில் தீர்வு காணப்படும்!

### அரசாங்கம் உறுதி

கொழும்பு, ஜன. 01

சிவப்பு அரிசிக்கு நாட்டில் நிலவும் தட்டுபாட்டை நீக்க விரைவில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகச்சந்திப்பு நேற்று 11

## ஊடகங்களுக்கு தணிக்கை விதிக்கும் எண்ணம் இல்லை!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜன. 01

ஊடகங்களுக்கு தணிக்கை விதிக்கும் எண்ணம் புதிய அரசாங்கத்திற்கு இல்லை என சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கத் தின் பிரதிநிதிகளுடன் ஊடக அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே 11

## மோகனதாஸ் சுவாமிகளுக்கு 'சாதனைத் தமிழன்' விருது!

யாழ்ப்பாணம், ஜன. 01

'டான் தொலைக் காட்சி' குழுமம் வருடாந்தம் வழங்கும் சாதனை தமிழன் விருது சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மேகனதாஸ் சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது.

டான் தொலைக் காட்சி குழுமம் ஒவ்வோர் ஆண்டின் நிறைவிலும் டிசெம்பர் 31ஆம் திகதி '31 இன்னிசை 11



## முன்கூட்டி வெளியாகிய 3 வினாக்களுக்கு இலவச புள்ளி வழங்குவது உரிமை மீறல்!

### புலமைப்பரிசில் பரீட்சை குறித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜன. 01

அண்மையில் நிறைவடைந்த தரம் 05க்கான புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் முன்கூட்டியே வெளியான மூன்று வினாக்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்குவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், வல்லுநர்கள் முன்வைத்த மூன்று பரிந்துரைகளில், பொருத்தமான பரிந்துரையை தேர்வு செய்து, உடனடியாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வினாத் தாள்கள் வெளியானதில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களான ஐ.ஜி.எஸ். பிரேமதிலக மூன்று மில்லியன் ரூபாவையும், சமிந்த குமார இலங்கசிங்க இரண்டு மில்லியன் ரூபாவையும் அரசாங்கத்துக்கு 11

## வவுனியாவில் பஸ் மோதி 7 வயது சிறுவன் மரணம்!

- குமார கோகுலன் -

வவுனியா, ஜன. 01

வவுனியா, பாவற்குளம் பகுதியில் சைக்கிள் மீது தனியார் பஸ் மோதியதில் 7 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா, பாவற்குளம், படிவம் இரண்டு பகுதியில் சாரதி பஸ்ஸை நிறுத்தி விட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுவதற்காக பஸ்ஸைச் 11

## மகளைத் தனியார் கல்வி நிலையத்துக்கு அழைத்து செல்ல முயன்ற தந்தை சாவு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ்ப்பாணத்தில், மகளை தனியார் கல்வி நிலையத்துக்கு அழைத்துச் செல்ல முயன்ற தந்தை ஒருவர் மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதன் போது ஊரெழு கிழக்கு, ஊரெழு பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் கிருபரஞ்சன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் காலை மகளை கல்வி நிலையத்துக்கு அழைத்துச் செல்வதற்கு 11




வாசகர்கள், முகவர்கள்
விளம்பரதாரர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு ஏப்ரலில்

கொழும்பு, ஜன. 01

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு 11

## 2025 வரவு - செலவுத்திட்டம் பெப்ரவரி 17இல் முன்வைப்பு

கொழும்பு, ஜன. 01

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தை (வரவு-செலவுத்திட்ட விவாதம்) 2025 பெப்ரவரி 18ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை நடத்துவதற்கு சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல் கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இணங்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் 11

## அரசாங்க உத்தியோகத்தர்களை குறைக்கும் எதிர்பார்ப்பு இல்லை

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 01

அரசாங்க உத்தியோகத்தர்களை குறைப்பது தொடர்பிலான எதிர்பார்ப்பு இல்லையென சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறைபடியாத கரங்களுடன் இருந்தால் மக்களுக்கு சிறப்பாக பணி செய்யலாம்

## வடக்கு மாகாண ஆளுநர் கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 01

"கறைபடியாத கரங்களுடன் இருந்தால்தான் பொது மக்களுக்கு சிறப்பான சேவையைச் செய்ய முடியும். ஜனாதிபதியும் இதைத்தான் வலியுறுத்தியிருக்கின்றார். எங்கள் அரசாங்கப் பணியாளர்கள் மக்களுக்கு சேவைவழங்கும் வகையில் எதிர்காலத்தில் தங்களை மாற்றிக்கொள்வதற்குத் தயாராகவேண்டும்."

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரி வித்தார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சும், முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய உலக மண் தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப் பட்டது. முல்லைத்தீவு மாவட்ட செயலர் அ.உமா மகேஸ்வரன் நிகழ்வின் தலைமை உரையில், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்துதரவேண்டும் என ஆளுநரைக் கோரியதுடன் சுற்றுலாத்துறை ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திகளை முன்னெடுக்க நிதி ஒதுக்கீடு அதிகரித்துத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் தனதுரையில், நாங்கள் கல்வி கற்கின்ற காலத்தில் இவ்வாறு பல தினங்கள் கடைப்பிடிக்கப் படவில்லை. இப்போது ஐ.நாவால் பல தினங்கள் அறிமுகப்படுத்தப்பட் டிருக்கின்றன. அவ்வாறு ஒரு தினத்தை அறிமுகப்படுத்துவதென்றால் அதன் முக்கியத்தும் அல்லது பயன்பாடு இப்போது தேவைப்படுகின்றது என்பது அர்த்தம். இந்த மண்ணை இயற்கை சீரழிக்கவில்லை. மனிதன்தான் சீரழித்துக்கொண்டிருக் கின்றான்.

சகல வளமும் கொண்டது எங்கள் நாடு. அதைப்போல எமது மாகாணமும் சகல வளங்களையும் காலநிலையையும் கொண்டிருக்கின்றது. அப்படியான எமது மாகாணத்தில் விவசாயிகள் தங்களை இன்னமும் ஏழை விவசாயிகள் என்று விளித்துக்கூறிக் கொண்டிருக்கின்றனர். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். அவர்களுக்கு நவீன முறைமையிலான விவசாயத்தை அறிமுகப்படுத்தவேண்டும். அவர்களின் உற்பத்தியையும், அதன் தரத்தையும் ஊக்குவிக்க வேண்டும்.

அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது கண்மூடித்தனமாக எதிர்க்கின்றார்கள். அபிவிருத்திகளை முன்னெடுக்கும் போது ஆகக்குறைந்த சூழல் பாதிப்பு இருக்கும். அதை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைத்து நாம் செய்யவேண்டும். அதை விடுத்து எல்லாவற்றையும் எதிர்க்கும் மனநிலையில் நோக்கிக் கொண்டிருந்தால் நாம் முன்னேற முடியாது.

அதிகாரிகளுடன் போராட வேண்டியிருப்பதாக அமைச்சர்களே கூறியிருக்கின்றனர். அது உண்மைதான். பல அதிகாரிகள் பிழையானவற்றுக்கு பழகிவிட்டார்கள். அவர்களை அதிலிருந்து மாற்றுவதற்கு பாடுபட வேண்டியிருக்கின்றது. எங்கள் வடக்கு மாகாணமும் அதிலிருந்து விதிவிலக்கானது அல்ல. நேர்மையானவர்கள் பழிவாங்கப்படுகின்றார்கள் அல்லது பந்தாடப்படுகின்றார்கள். அதைப்போலத்தான் வசதி படைத்த - செல்வாக்கானவர்கள் அரச திணைக்களங்களுக்கு வந்தால் அவர்களுக்கு மரியாதையுடன் விரைந்து சேவை வழங்கும் அதிகாரிகள், ஏழை எளிய மக்கள் வந்தால் அலைக்கழிக்கின்றனர். இந்த நிலைமை மாறவேண்டும். புதிய அரசாங்கம் மக்கள் நேய சேவையைக் கொண்டு செல்லவே விரும்புகின்றது. அரச அதிகாரிகள் அதற்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்துகொண்டனர். உலக மண் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப் பட்டன. (அ)

# அர்ச்சுனா எம்.பி. கூறிய விடயங்கள் உண்மையே

## நீதிமன்றில் சட்டத்தரணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.01

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் கூறிய விடயங்கள் உண்மையே என்று அர்ச்சுனா சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

அர்ச்சுனா இராமநாதனிடம் 100 மில்லியன் ரூபாய் நஷ்ட ஈடு கோரி யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

வழக்காளியான சத்தியமூர்த்தி, இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் தடுப்புக் காவலில் இருந்த போது அங்கு அவருக்கு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பில் அவருக்கு அவதூறாக எதிராளி அர்ச்சுனாவால் சொல்லப்பட்ட விடயங்கள் மற்றும் யாழ். போதனா மருத்துவமனைக்குள் நுழைந்து சத்தியமூர்த்தியுடன் வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டு, அவருடன் பிணக்குக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பிலும், அன்றைய தினத்தில் இராமநாதன் அர்ச்சுனா தன்னுடைய முகப் புத்தகத்தில் வெளியிட்ட காணொலி ஊடாக அவதூறு பரப்பப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, எதிராளியான பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரரர் கூறிய விடயங்கள் அனைத்தும் உண்மை எனவும், அவற்றை மன்றில நிரூபிக்கத் தயாராக இருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு விசாரணைக்காக திகதியிடப்பட்டுள்ளது. (எ)

# இலங்கையில் கரையொதுங்கிய இந்தோனேசிய நாட்டுப் படகு



மட்டக்களப்பு, ஜன.01

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பால்சேனை கடற்கரையில் இந்தோனேசியா நாட்டு படகு ஒன்று நேற்று கரையடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கடற்றொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகள் யாழில் நேற்று சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜன. 01

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துக்கும், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்துக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று யாழில் உள்ள தனியார் விடுதியில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, கடற்றொழில் அமைச்சால் முன்மொழியப்படவுள்ள புதிய சட்டமூலத்தை இடைநிறுத்தல், தமிழக அரசியல் தலைமைகளுடன், வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் பேச்சுகள் முன்னெடுப்பதை வலியுறுத்தல், தேசிய மக்கள் சக்தியால் மீனவர் பிரச்னை தொடர்பில் கோரப்பட்ட கால அவகாசம் ஜனவரி மாதத்துடன் நிறைவடைகிறது, எனவே 2025 ஆம் ஆண்டில் வடமாகாண மீனவர்களின் வாழ்வியல் செயல் திட்டங்கள் குறித்து எடுத்துரைக்க ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

குறித்த சந்திப்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமன் குமார, வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் ஜோசப் பிரான்சிஸ், இணையத்தின் செயலாளர் மொஹமட் ஆலம், இணையத்தின் பொருளாளர் ரவீந்திரன் பிரியா, ஊடகப் பேச்சாளர் அ. அன்னராசா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்ட மீனவச் சங்க பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# யாழ்ப்பாண மாவட்ட செயலக வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜன.01

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் தலைவியும் உதவி மாவட்ட செயலாளருமான உ. தர்சினியின் தலைமையில் மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் உத்தியோகத்தர்களின் - புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகள், க.பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற பிள்ளைகள் மற்றும் உயர் தரத்தில் சிறப்புச் சித்தி பெற்று பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, உத்தியோகத்தர்களுக்கு இடையிலான போட்டிகள், உத்தியோகத்தர்களின் கவிதை மற்றும் பாடல் இசை நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (எ)

# "அரசியல் பழிவாங்கலில் அரசாங்கம் ஈடுபடாது"

மட்டக்களப்பு, ஜன.01

எமது அரசாங்கம் எந்தவோர் அரசியல் பழிவாங்கலையும் முன்னெடுக்காது.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சட்டத்தின் மூலம் மட்டுமே நாங்கள் ஊழல்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. பிரபுவின் வேண்டுகோளுக்கு அமைவாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
01.01.2025 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 17

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## புதிய ஆண்டை திட்டமிடுவது என்றால்?

நாலடியாரில் ஒரு கூற்றுண்டு - அதாவது, கழிந்து செல்லும் நாட்கள் ஒவ்வொன்றும் வாழ்நாட்களாகும். ஒவ்வோர் ஆண்டும் கழிந்து செல்கின்ற போது, மனித வாழ்வில் ஓர் ஆண்டு குறைகின்றது.

தனிமனித வாழ்வியல் கண்ணோட்டத்தில் நோக்கினால் ஒவ்வொரு புதிய ஆண்டையும் மகிழ்சியுடன்தான் எல்லோருமே எதிர்கொள்ளுகின்றனர். ஒவ்வொருவருக்கும் புதிய ஆண்டு தொடர்பில் பலவிதமான கனவுகளும் திட்டங்களும் இருக்கும். எந்தவொரு திட்டங்களும் இல்லாமல் வருவதை எதிர்கொள்வோம் என்னும் மனோநிலைக்குள் தங்களின் வாழ்வை சுருக்கிக் கொள்வோரே மனிதர்களில் பெரும்பான்மை. ஆனால், ஓர் ஆண்டின் முடிவும், புதியதோர் ஆண்டின் ஆரம்பமும் அரசியல் கண்ணோட்டத்தில் வேறுவிதமானது.

இந்தப் பின்புலத்தில் தமிழ் மக்களுக்கான அரசியலை உற்றுநோக்கினால் ஒவ்வோர் ஆண்டு முடிவுறுகின்ற போதும் ஏமாற்றத்துடன்தான் முடிவுறுகின்றது. யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்களில் அரசியல் ரீதியில் எந்தவொரு முன்னேற்றமும் இன்றியே ஒவ்வோர் ஆண்டுகளும் கழிந்திருக்கின்றன. யுத்தத்துடன் தமிழர் வாழ்வு பிணைந்திருந்த ஆண்டுகளில் ஏதோ ஒன்று கிடைக்கப் போகின்றது என்னும் நம்பிக்கையுடன் தமிழர்களின் ஆண்டுகள் கழிந்தன. ஆனால் 2009இற்கு பின்னரான நிலைமையோ முற்றிலும் வேறானது. இருப்பதாவது மிஞ்சுமா - இறுதியில் இந்த அரசியல் கட்சிகள் எதைத்தான் மக்களுக்கு விட்டுவைக்கப் போகின்றனர் என்னும் கேள்வியுடன்தான் ஒவ்வோர் ஆண்டும் முடிவுற்றது - அதே கேள்வியுடன்தான் புதிய ஆண்டும் ஆரம்பித்தது.

ஆனால், கடந்த பதினைந்து வருடங்களாக ஆண்டின் முடிவும், தொடக்கமும் ஏமாற்றங்களை மட்டுமே விட்டுச் சென்றிருக்கின்றது. அரசியல் ரீதியில் எந்தவொரு முன்னேற்றமும் இன்றியே ஆண்டுகள் கழிந்திருக்கின்றன என்றால், அதன் பொருள் என்ன? பதில் ஒன்றுதான். கடந்த பதினைந்து வருடங்களாக அரசியலுக்கு தலைமை தாங்கியதாகக் கூறிக்கொள்ளும் எவருமே அரசியலை முறையாக, நேர்மையாக, மக்களின் நலன்களுக்கு ஏற்றவாறு கையாளவில்லை என்பதைத் தவிர வேறு என்ன பதில் இருக்க முடியும்.

இதுதான் நிலைமையென்றால் புதிய ஆண்டை திட்டமிடுதல் என்பதன் பொருள் என்னவாக இருக்க முடியும்? உண்மையிலேயே தற்போதுள்ள அரசியல் கட்சிகள் என்பவற்றால், அவற்றுக்கு தலைமை தாங்குபவர்களால் புதிய ஆண்டை திட்டமிட முடியுமா? கடந்த பதினைந்து வருடங்களை கையாள்வதில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்பவர்கள் மட்டுமல்ல - கருத்துருவாக்கிகள் என்போர், சிவில் சமூகத் தலைவர்கள் என்போர், புத்திஜீவிகள் என்போர், புலம்பெயர் அமைப்புக்கள் என்போர் அனைவருமே தோல்வியுற்றவர்கள்தான். இவ்வாறானதொரு பின்புலத்தில் எவ்வாறு புதிய ஆண்டை திட்டமிட முடியும்?

எனவே புதிய ஆண்டை திட்டமிட வேண்டுமாயின் முதலில் பழைய ஆண்டுகளில் ஏன் விடயங்களை கையாள முடியாமல் போனது - எந்த இடத்தை எங்களால் விளங்கிக் கொள்ள முடியாமலிருந்தது? பதினைந்து வருடங்களாக சர்வதேசத்தை நோக்கி செயல்படுவதாக நாம் கூறிவந்த போதிலும் கூட ஏன் எதுவும் நடக்கவில்லை - அவ்வாறாயின் நாம் அரசியலை புரிந்து கொள்வதில் தொடர்ந்தும் தவறிழைக்கின்றோமா? இப்படியான கேள்விகளின் அடிப்படையில் முதலில் பழைய ஆண்டுகளின் தோல்விகள் தொடர்பில் சுயமதிப்பீடு அவசியம். அவ்வாறான சுயமதிப்பீட்டுக்கு தயாரில்லை என்றால் புதிய ஆண்டை திட்டமிடுதல் என்பதும் ஒருபோதுமே சாத்தியப்படாது.

கடந்த ஆண்டிலும் சரி முன்னைய ஆண்டுகளிலும் சரி, 'ஈழநாடு' தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்திவந்திருக்கின்றது. அந்த விடயங்கள் அனைத்தும் சரியென்பதையே காலம் நிரூபித்திருக்கின்றது. 'ஈழநாடு' சுட்டிக்காட்டிய விடயங்களை தமிழ்த் தேசியவாதிகளாக தங்களை அடையாளப்படுத்தியவர்கள், நேர்மையுடன் முறையாக உள்வாங்கிச் செயல்பட்டிருந்தால், தமிழர் அரசியலில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கும். குறிப்பாக அரசியலமைப்பிலுள்ளவற்றை முழுமையாக பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை 'ஈழநாடு' தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது. ஆனால் இன்றோ - அதனைக் கூட காப்பாற்ற முடியுமா என்னும் கேள்வியுடன்தான் இந்த ஆண்டு ஆரம்பமாகின்றது. அந்தளவிற்கு தமிழர் அரசியல் மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றது.

## பொறுப்பற்ற செயல்பாடுகளால் போக்குவரத்து சேவைகள் பாதிப்பு

### மன்னார் நகர சபைமீது குற்றச்சாட்டு

மன்னார், ஜன.01

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தற்காலிக வியாபார நிலையங்கள் குத்தகைக்கு விடப்பட்ட நிலையில், வாகன தரிப்பிட வசதிகள் எவையும் மன்னார் நகர சபையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக மன்னார் நகரின் மத்தியிலுள்ள பேருந்து நிலைய வளாக பகுதியில் பண்டிகைக் கால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளமையால் அங்கு கூடும் மக்களின் வாகனங்கள் மத்திய பேருந்து நிலைய பகுதியில் தரித்து நிற்பதால் தனியார் மற்றும் இ. போ. ச. பேருந்துகள் தமது சேவையை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஓட்டோ சாரதிகளும் தமது சேவையை முன்னெடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.(எ)

## தமிழர் தாயகத்தில் கல்வித்தரம் வீழ்ச்சி

### ரவிகரன் எம். பி. கவலை

முல்லைத்தீவு, ஜன. 01

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களில் எழுச்சி பெற்றிருந்த மாணவர்களின் கல்வித்தரம், தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கவலை வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை - பத்தாம் குறிச்சி, அறிவொளி மையம் கல்வி நிலையத்தில், கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்விச் சுற்றுலாவின் போது, முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, குறித்த மாணவர்கள் ரவிகரன் எம்.பியின் இல்லத்துக்கு சென்றதுடன், கலந்துரையாடலொன்றிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போதே ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

## பல்வேறு அமைப்புகளிடம் நிதிபெற்று தேவைகளை நிறைவேற்ற வேண்டும்

### சத்தியலிங்கம் எம். பி. சொல்கிறார்



வவுனியா,ஜன.01

பல்வேறுபட்ட அமைப்புகள் ஊடாக நிதியைப் பெற்று மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா நகர் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புகளுடன் கிராமங்களில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் நேற்று கலந்துரையாடல் ஒன்றை சத்தியலிங்கம் எம். பி. மேற்கொண்டார்.

இதன்போது, வவுனியா நகர் வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்களது கிராமங்களுக்குத் தேவையான திட்டங்கள் தொடர்பில் எழுத்து மூலமாக கோரிக்கைகளை கையளித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சத்தியலிங்கம், “இந்த அரசாங்கத்தின் ஊடாக ஒதுக்கப்படும் நிதி எவ்வாறு வரும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை.

எனினும், நாம் பல்வேறுபட்ட அமைப்புகள் ஊடாக நிதியைப் பெற்று மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு உள்ளது. அதனை நாம் செயல்படுத்தவேண்டும்”- என்றார். (எ)

## நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச் சொற்பொழிவு


யாழ்ப்பாணம், ஜன.01

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் - 08 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.


ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவ சிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சைவப்புலவர் செ. த. குமரன் “வரைபுனை படலம்” என்னும் விடயப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இதேவேளை, சொற்பொழிவில் இருந்து, மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
இன்றைய நாள் கணவன் மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும் மகிழ்ச்சி தங்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் முக்கிய விஷயங்களை நீங்களே நேரடியாக சென்று முடிப்பது நல்லது. குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும்.

**மிதுனம்**
கல்யாணப் பேச்சு வார்த்தை கைகூடி வரும். உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். ஆடை ஆபரணம் சேரும்.

**கடகம்**
உங்களை சுற்றி இருப்பவர்களை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**சிம்மம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். தாயாருடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வாகனப் பழுதை சரி செய்வீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் இதுவரை இருந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி தங்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள்.வெளிவட்டாரத்தில்மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். கடன் வாங்காதீர்கள். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் வந்து நீங்கும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.


**மகரம்**
பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் செல்லுங்கள். எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையை சமாளிக்க வேண்டி வரும்.

**கும்பம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதையும் சாதிக்கும் துணிச்சல் வரும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். கண்டும் காணாமல் இருந்தவர்கள் வலிய வந்து பேசுவார்கள்.

**மீனம்**
பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பயணங்களால் பயனடைவீர்கள். விஜபிகள் அறிமுகமாவார்கள். மரியாதை கூடும்.

# பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சுகாதார பிரச்னைக்கு தீர்வு வேண்டும்!

**யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரிடம் கோரிக்கை**



யாழ்ப்பாணம், ஜன.01

பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கி வரும் சுகாதாரப் பிரச்னைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத் தலைவருக்கும் கேதீஸ்வரனுக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் சுகாதார ரீதியான சவால்களை நிவர்த்தி செய்ய வேண்டுகோள் விடப்பட்டது. பாடசாலை சிற்றுண்டிசாலையின் தரத்தை உயர்த்துதல், விரைவு உணகளையும் எண்ணெய் உணவுகளையும் பொதி செய்த உணவுகளையும் தடை செய்தல். மலசலகூட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து தூய்மைப்படுத்தல், சுத்தமான நீர் கிடைப்பதை உறுதிப்படுத்தல், பெண் பிள்ளைகள் மத்தியில் அதிகரித்துள்ள இமோகுளோபின் குறைபாடு, கட்டிளமைப்பருவ உணவுப் பழக்கம் என்பன பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கான உரிய நடவடிக்கையை 2025ஆம் ஆண்டு தீவிரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதியாக தெரிவித்தார். (எ-05)

# சங்கானை மருத்துவமனை சூழலில் தெரு நாய்த் தொல்லை அதிகரிப்பு!

**அச்சத்தில் நோயாளர்கள், அதிகாரிகள் அலட்சியம்**

யாழ்ப்பாணம், ஜன.01

யாழ்ப்பாணம் - சங்கானை மருத்துவமனையிலும் அதன் சுற்றாடலிலும், மருத்துவமனையின் அருகிலுள்ள சங்கானை பிராந்திய வைத்திய அதிகாரி அலுவலகத்தை அண்மித்த சுற்றாடலிலும் தெரு நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இதனால், மருத்துவமனைக்கு செல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மருத்துவமனை வளாகம், பிரதான நுழைவாயில், அருகிலுள்ள வீதிகள் மற்றும் சந்திகளில் அதிகளவிலான நாய்கள் சுற்றித்திரிகின்றன. இதனால், நோயாளர்கள் மட்டுமின்றி வீதியால் செல்வோரும் விபத்து ஏற்படுமோ? நாய்கள் கடிக்குமோ? என்கின்ற அச்சத்துடன் பயணிக்கின்றனர். இது தொடர்பில் அதிகாரிகளுக்கு பலமுறை தெரியப்படுத்தியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ-05)

# சங்குப்பிட்டி பால திருத்த வேலைகளை பார்வையிட்டார் இளங்குமரன் எம். பி.

யாழ்ப்பாணம், ஜன.01

சங்குப்பிட்டி பாலத்தில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. இவ்வாறான நிலையில் அங்கு உரிய முறையில் திருத்த வேலைகள் இடம் பெறவில்லை என்று சிலர் குற்றச்சாட்டு களை முன்வைத்தனர்.

இந்த நிலையில், புனரமைப்புப் பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் பார்வையிட்டார்.

இதன் போது, திருத்த வேலைகளின் தரம் குறித்தும் மூலப்பொருட் களின் தரம் குறித்தும் ஆராய்ந் ததுடன் புனரமைப்புப் பணி களில் ஈடுபடுபவர்களுடனும் கலந்துரையாடினார். (எ-05)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஆலயத்துக்கு உதவி



யாழ்ப்பாணம், ஜன. 01

சந்நிதியான் ஆச்சிரமம் மலையகத்தில் மேற்கொண்டு வரும் ஆன்மீக கல்வி சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பதுளை - வேவெஸ்ஸ, சிறீ முத்துமாரி அம்மன் ஆலய திருத்த வேலைகளுக்காக முதல் கட்ட நிதியாக 200, 000 ரூபாயை ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டம், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் வழங்கப்பட்டது. (எ-02)

# கிளிநொச்சியில் தேருநர் இடாப்பு மீளாய்வு கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவூட்டல்

கிளிநொச்சி, ஜன.01

2025ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். சி. அமல்ராஜ் ஆகியோர் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இடாப்பு மீளாய்வு முறைகள் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்களுக்கு இதன் போது தெளிவூட்டப் பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்களின் அனுபவமின்மையே அரிசி பிரச்னைக்குப் பிரதான காரணம்

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 01

**நாட்டில் அரிசி, தேங்காய் போன்ற அடிப்படை பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்புக்கு, ஆட்சியாளர்களின் அனுபவமின்மை மற்றும் முகாமைத்துவம் செய்துகொள்ள முடியாமையே காரணமாகும்.**

இந்த நிலை ஏற்படும் என்பதாலே அனுபவமுள்ளவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்து வந்தார். ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த விடயம் தற்போது உண்மையாகியுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியிலுள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,நாட்டை ஆட்சி செய்யக் கூடிய ஆட்சியாளர்களுக்கு அனுபவம் மிக முக்கியமாகும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து தெரிவித்து வந்திருந்தார். அனுபவமுள்ளவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு கடந்த பொதுத் தேர்தலின் போது அவர் தெரிவித்து வந்தபோது அவரை கேலி செய்தார்கள்.

ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு தெரிவித்துவந்ததை திருட்டு நடவடிக்கையாக தெரிவித்து மக்களை ஏமாற்றிவந்தார்கள். தற்போது நாட்டு மக்கள் பாரிய பிரச்னைகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

குறிப்பாக தேங்காய் விலை எப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளது. குரங்கு பிரச்னையே தேங்காய் விலை அதிகரிப்புக்கு காரணம் என தெரிவிக்கின்றனர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் குரங்கும் இருந்து ரணிலும் இருந்தார்.

தேங்காயும் இருந்தது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# 2 லொறிகள் நேருக்கு நேர் மோதி விபத்து!

கொழும்பு, ஜன. 01

பொலனறுவை, வெலிகந்த, சிங்கபுர பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

அரிசி மூடைகளை ஏற்றிச் சென்ற லொறியும் வெற்றிலைகளை ஏற்றிச்சென்ற லொறியும் நேருக்கு நேர் மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது ஐந்து பேர் காயமடைந்துள்ள நிலையில் வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சகல மாணவருக்கும் 6,000 ரூபா!

கொழும்பு, ஜன. 01

அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாத ஏனைய தகுதியுடைய பாடசாலை மாணவர்களுக்கும் தலா 6,000 ரூபாவை வழங்குவது தொடர்பில் நிதியமைச்சு கவனம் செலுத்தி வருகிறது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்ய 6,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு வரும் நிலையில், அதனை அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் வழங்குமாறு கடந்த சில நாட்களாக பல தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்த நிலையிலே, ஏனைய மாணவர்களுக்கும் குறித்த உதவித்தொகையினை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# தந்தை தாக்கியதில் மகன் உயிரிழப்பு!

## பூண்டுலோயாவில் சம்பவம்

கொழும்பு, ஜன 01

நுவரெலியா, பூண்டுலோயா பொலிஸ்பிரிவிற்கு உட்பட்ட டன்சினன் கீழ்ப்பிரிவு தோட்டத்தில் தந்தையின் தாக்குதலில் 25 வயதான மகன் உயிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பூண்டுலோயா, டன்சினன் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 25 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் தனது மகள், தந்தை மற்றும் இளைய சகோதரருடன் குறித்த பகுதியில் வசித்து வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, தந்தை மற்றும் இளைய சகோதரனுடன் ஏற்பட்ட தகராறில் அவர்கள் இருவரும் தடிகள் மற்றும் கற்களால் தாக்கியதில் குறித்த நபர் உயிரிழந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றச் செயலுடன் தொடர்புடைய 46 வயதான தந்தையும், 18 வயதான இளைய மகனும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஊழல் எதிர்ப்பு சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஜன. 01

ஊழல் எதிர்ப்பு சட்டத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டம் அமுல்படுத்திய பின்னர் குறித்த சட்டத்துக்கு அமைய சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுக்கு கணிசமான சட்ட ரீதியான பொருள் கோடல்கள் மற்றும் தொழில் நுட்ப பிரச்னைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே மேற்குறித்த சட்டத்தின் சில பிரிவுகளை திருத்தம் செய்தல் மற்றும் புதிதாக சில பிரிவுகளை சட்டத்தில் அறிமுகம் செய்வதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்மொழிந்துள்ளது.

அதற்கமைய 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஏற்பாடுகளை ஆய்வு செய்து கட்டாயமாக திருத்தம் செய்ய வேண்டிய பிரிவுகள் மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய புதிய பிரிவுகள் தொடர்பான விதந்துரைகள் அடங்கிய விபரமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஒரு ஆணையாளரின் தலைமையில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்ட வரைஞர் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் சிரேஷ்ட அலுவலர்களை உள்ளடக்கிய குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# இலங்கை பொலிஸின் யூடியூப் தளம் மீது சைபர் தாக்குதல்!

கொழும்பு, ஜன. 01

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ யூடியூப் தளம் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

தற்போது அந்த தளத்தை அணுக முடியாதநிலையில், அங்கீகரிக்கப்படாத உள்ளடக்கம் அதில் பதிவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த யூடியூப் தளத்தை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் தனது முகநூல் பக்கத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தநிலையில், குற்றவாளிகளை அடையாளம் காண அதிகாரிகள் விசார ணையை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 168000 மில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்கள் இன்று ஏல விற்பனை

கொழும்பு, ஜன. 01

ஒரு இலட்சத்து 68 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், இன்று ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 43 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 60 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக, மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# உள்ளாட்சி தேர்தல் குறித்து சஜித் அணி கழுகுப்பார்வை!

கொழும்பு, ஜன. 01

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுள்ளது.

புத்தாண்டுக்குரிய அரசியல் செயற்பாடுகள், உள்ளாட்சி சபைத் ரேதல், நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், முக்கிய சில முடிவுகளை எடுப்பதற்காகவுமே இக்கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

இதில் கட்டாயம் பங்கேற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும், எதிரணி பிரதம கொறடா தரப்பில் அறிவிக்கப் பட்டுள்ளது. இச்சந்திப்பு முடிந்த பின்னர் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுடன் சஜித் பிரேமதாச பேச்சு நடத்தவுள்ளார். (அ)

# குடும்பத் தகராறினால் ஒருவர் குத்திக் கொலை

கொழும்பு, ஜன. 01

மதுரங்குளிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடயாமட்ட பகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மதுரங்குளிய கடயாமட்ட பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் தனது மூத்த சகோதரியின் மகன் உள்ளிட்ட சிலருடன் ஏற்பட்டுத்திக் கொண்ட தகராறில், சகோதரியின் மகன் கூரிய ஆயுதத்தால் தாக்கி இந்த கொலையை செய்துள்ளதாக குற்றச்சம்பவத்துடன் தொடர்புடைய 38 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட் டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 இன் ஆரம்பத்தில் எங்களால் நல்ல நிலையை அடையமுடியும்!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜன. 01

**"எமது அரசு பதவியேற்று 3 மாத காலத்துக்குள் நாட்டை ஸ்திரப்படுத்த முடிந்துள்ளது. இடைநிறுத்தப்பட்ட பல வெளி நாட்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிலையாக ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் இலங்கை நகர்கின்றது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் எம்மால் நல்லதொரு நிலையை அடைய முடியும்."**

-இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் திட்டமிட்ட வகையில் முறையாக எமது அபிவிருத்தி கருத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். ஆட்சிக்கு வந்தோம் செய்தோம் என எம்மால் நடந்துகொள்ள முடியாது. நாம் நிறைவேற்ற வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்கள் காரணமாகவே இந்த நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனினும், முறையாகவும் திட்டமிட்ட வகையிலும் நாட்டைக் கட்டியெழுப்புபவே மக்கள் எமக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளனர். வளமான எதிர்காலத்துக்காக எமக்கு இந்த மக்கள் ஆணை கிடைத்துள்ளது.

2025 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட வகையில் முறையாக எமது அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான தலைமைத்துவத்தை நாம் வழங்குவோம். இதற்காக அரச சேவையில் உள்ள அனைவரும் எமக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என நாம் நம்புகின்றோம்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அரசியல் தலைமைத்துவம் மற்றும் அரச அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரும் ஒரு நோக்கத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் என அனைவரும் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக உள்ளனர். எனவே, அவர்களுடன் இணைந்து நாட்டின் சுபீட்சத்துக்காக அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்-என்றார். (அ)

# அமைச்சுக்களில் விசாரணை அலகு நிறுவுவதற்கு ஏற்பாடு!

கொழும்பு, ஜன. 01

அரச நிறுவனங்கள் பொது மக்களுக்கு வகைகூறுதலை உறுதி செய்வதற்காக அமைச்சுக்களில் விசாரணை அலகுகளை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக, அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்கத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது அரச சேவை தொடர்பில் நாளாந்தம் அதிகளவு முறைப்பாடுகள் பெயர் குறிப்பிட்டும், அநாமதேயமாகவும் ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் கிடைத்து வருகின்றது. அரசு மீது மக்கள் வெளிப்படுத்தியுள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கும், குறிப்பாக அரச சேவையில் எதிர்பார்க்கப்படும் சாதகமான மாற்றங்களை மேற்கொள்வதற்காக அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற வகையிலும் மற்றும் விஞ்ஞான ரீதியாகவும் விடயங்களை விசாரணை செய்ய வேண்டியுள்ளது.

அதற்கமைய, முன்னைய அரசுகளின் கீழ் அரச நிறுவனங்கள் செயற்பட்டுள்ள விதம் தொடர்பிலும், தற்போது அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் உள்ளிட்ட விடயங்களை விசாரணை செய்வதற்காக அமைச்சு மட்டத்தில் நாடு தழுவிய சேவையில் முதலாம் தர அலுவலர் அல்லது புலனாய்வுச் செயன்முறை தொடர்பான அனுபவமுள்ள அரச சேவையின் முதலாம் தர நிறைவேற்று அதிகாரியின் தலைமையில் விசாரணைப் அலகை நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# இலங்கைக்கான சேவையை அதிகரித்துள்ளது எமிரேட்ஸ்!

கொழும்பு, ஜன. 01

உலகின் மிகப்பெரிய சர்வதேச விமான நிறுவனங்களில் ஒன்றான எமிரேட்ஸ், கொழும்பு மற்றும் டுபாய் இடையே நாளை முதல் கூடுதல் திட்டமிடப்பட்ட சேவையை இயக்குவதாக தெரிவித்துள்ளது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட விமானமானது அதன் இருக்கை கொள்ளளவை 30 வீதத்தால் அதிகரிக்கிறது.

கூடுதல் விமானத்தில் 360 பயணிகளுக்கு இடமளிக்க முடியும்.

மேலும், 2025 இல் சுற்றுலாப் பயணிகளின் வருகையை கணிசமாக அதிகரிக்கும் இலங்கையின் திட்டங்களுக்கும் உதவியாக அமைகிறது.

மேலதிக சேவை 2025 மார்ச் 31 வரை வாரத்தில் ஆறு முறை செயல்படும்.

ஈ.கே. 654 விமானம் டுபாய் சர்வதேச விமான நிலையத்திலிருந்து உள்ளூர் நேரப்படி காலை 10:05 மணிக்கு (புதன் கிழமைகள் தவிர) புறப்பட்டு மாலை 4.00 மணிக்கு கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும்.

ஈ.கே. 655 விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிந்து இரவு 10 மணிக்குப் புறப்பட்டு, டுபாய் விமான நிலையத்தை அடுத்த நாள் அதிகாலை 1.05 மணிக்குச் சென்றடையும்.

2025 ஏப்ரல் 1 முதல், புதன் கிழமைகளில் ஏழாவது வாராந்திர விமானம் சேவையில் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்படும்.

எமிரேட்ஸ் தற்போது கொழும்பு மற்றும் டுபாய் இடையே இரண்டு நேரடி சேவைகளையும், மாலே வழியாக மூன்றாவது தினசரி சேவையையும் நடத்துகிறது. (அ)

# நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அரச வங்கிகள் மூலம் சலுகை கடன்!

கொழும்பு, ஜன. 01

சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு அரச வங்கிகள் ஊடாக மானிய வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த பருவங்களில் இத்திட்டம் அதிக முன்னேற் றம் அடைந்துள்ளதை அவதானிக்கப்பட்டதால், 2024/2025 பருவத்திலும் ஒவ்வொரு பருவத்திலும் இத்திட்டத்தை செயல்படுத்துவது விரும்பத்தக்கது என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறிப்பிட்ட அளவுகோல்களுக்கு உட்பட்டு அதிகபட்ச தினசரி 25 மெற்றிக் தொன் நெல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு இந்த சலுகை கடன் முறை பொது மற்றும் தனியார் வங்கிகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவி ருத்தி அமைச்சர் என்ற வகை யில்ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# 2025 நிதியாண்டு ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு அனுமதி!

கொழும்பு, ஜன. 01

2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், அதனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக முன்வைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. (அ)

# சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு குறைக்கப்படாது

கொழும்பு, ஜன. 01

சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு தொடர்பில் கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், டிசெம்பர் மாதத்தின் பின்னர் கொடுப்பனவு குறைக்கப்பட உள்ளதாக வெளியான தகவல்கள் முற்றிலும் பொய்யானவை மற்றும் அடிப்படையற்றவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுநீரக நோயாளர்களுக்கான 7,500 ரூபா கொடுப்பனவை 10,000 ரூபாவாக அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், அதிகாரமளிக்கும் வேலைத் திட்டங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிராந்திய செயலக மட்டத்தில் தகவல் புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனூடாக மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளில் எவ்வித குறைப்பும் மேற்கொள்ளப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தின் தகவல்களின்படி, நாட்டில் தற்போது 47,244 சிறுநீரக நோயாளிகள் இருப்பதாகவும், எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம், எனவே இந்த தகவலை புதுப்பிக்க வேண்டியது மிகவும் அவசியம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக தற்போது சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு பெறும் எவருக்கும் கொடுப்பனவு எவ்வித திலும் குறைக்கப்பட மாட்டாது என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அரச நிறுவனங்களில் இன்று விசேட நிகழ்வு!

கொழும்பு, ஜன. 01

2025 ஆம் ஆண்டுக்கான கடமைகள் ஆரம்பிக்கும் நாளான இன்று அனைத்து அரச நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ வைபவம் இடம்பெறும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை விடுத்து அறிவித்துள்ளதாக விடயம் தொடர்பான அமைச்சின் செயலாளர் அலோக பண்டார குறிப்பிட்டார்.

புதிய வருடத்தில் "தூய்மையான இலங்கை" தேசிய வேலைத்திட்டத்துடன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அந்த சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தூய்மை இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் தேசிய வைபவத்தை அனைத்து அரச மற்றும் தனியார் இலத்திரனியல் அலைவரிசைகள் ஊடாக ஒலிபரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், அனைத்து அரச நிறுவனங்களின் ஊழியர்களும் இதனைக் காணும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அலுவர் பண்டிகை முற்பணத்தை 40,000 ரூபாவாக அதிகரிக்கவேண்டும்!

## அரச அதிகாரிகளின் தொழிற்சங்க கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 01

**அரச உத்தியோகத்தர்களுக்கான 10,000 ரூபா பண்டிகைக் கால முற்பணத்தை இம்முறை குறைந்தபட்சம் 40,000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

அரச அதிகாரிகளின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் சுமித் கொடிகார இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன், தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப 10,000 ரூபா பண்டிகைக் கால முற்பணம் போதுமானதாக இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பாடசாலை மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 6,000 ரூபாய் உதவித்தொகையை அரச அதிகாரிகளின் பிள்ளைகளுக்கும் வழங்கவேண்டும் எனவும் அரச அதிகாரிகளின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைவர் சுமித் கொடிகார கேட்டுள்ளார். (அ)

# புதிய இராணுவ தளபதி நேற்று கடமை ஏற்றார்!

கொழும்பு, ஜன. 01

இலங்கை இராணுவத்தின் 25வது தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோ நேற்று இராணுவ தலைமையகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார்.

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிக்கோவும் புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொடவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் நேற்று முன் தினம் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று முன் தினம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

இராணுவத் தளபதி ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் கடற்படைத் தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் நேற்று தமது பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அரச முதலீட்டு கருத்திட்டத்தை துரிதப்படுத்த அதிகாரிகள் குழு!

## நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜன. 01

அரச முதலீட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடைய துரித மூலோபாயங்களைத் தீர்மானிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரச முதலீட்டுக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடைய துரித மூலோபாயங்களைத் தீர்மானிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பொறுப்புக் கூறுகின்ற நிறுவனப் பிரதானிகள் பதினொரு பேரை விஞ்சாத உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று அமைச்சரவையால் நியமிக்கப்படல் வேண்டும்.

கடந்த பத்து வருடங்களாக அரச மூலதன முதலீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் மேற்கொண்டுள்ள செலவுகளுக்கு ஈடான அனுமூலங்கள் கிடைக்கப் பெறாமை கண்டறியப்பட்டுள்ளது. இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பதற்கு இயலாமல் போயுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளரால் நியமிக்கப்படும் அமைச்சின் செயலாளர்கள் இருவர் மற்றும் ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிக செயலாளர் உள்ளிட்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட "அரச முதலீட்டு மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக் குழுவை" நியமிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது- என்றார். (அ)

# ஆடை தொழிற்சாலையை பார்வையிடச் சென்ற திசைக்காட்டி எம்.பிக்கள் இருவர் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜன. 01

பிங்கிரியவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றை பார்வையிடச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை சுற்றிவளைத்த மக்கள் குழுவொன்று அவ்விருவர் மீதும் தாக்குதல் நடத்தியதால் அப்பகுதியில், நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க மற்றும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹான் ஆகியோர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆடைத் தொழிற்சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடிவிட்டுச் செல்லவிருந்தபோதே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எம்.பிக்கள் சென்ற இரு வாகனங்களையும் சுற்றிவளைத்த மக்கள், அவர்களையும் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடைத் தொழிற்சாலையின் அதிகாரிகள் குழுவைச் சந்தித்து இருவரும் வெளியேற்ற முற்பட்டபோது, குழுவொன்று சுமார் அரை மணித்தியாலம் இருவரையும் சுற்றிவளைத்து ஆவேசமான வார்த்தைகளைக் கூறி அவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தியதுடன், வன்முறையில் ஈடுபடத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

சம்பவத்தின் பின்னர் பிங்கிரிய பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் பத்திரமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி இது தொடர்பில் குளியாபிட்டிய பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்கவிடம் விஜேசிறி பஸ்நாயக்கவிடம் நடத்திய விசாரணையில், ஆடைத் தொழிற்சாலையின் தலைவர்களுடன் தாம் கலந்துரையாடிக்கொண்டிருந்தபோது, ஆத்திரமடைந்த சிலர் தனது சட்டையை இழுத்து தாக்கியதாகத் தெரிவித்தார்.

தன்னுடன் அங்கு சென்ற புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹானையும் அந்த குழுவினர் துன்புறுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# புதிய விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ள அனுமதி

கொழும்பு, ஜன. 01

பல்கலைக்கழகங்களுக்கு புதிய விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவுடன் கலந்துரையாடிய பின்னர் இதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக அதன் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்தார்.

புதிய விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் 2 சுற்றுக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.தற்போது வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர்களில் 50 வீதமானவர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறியமையினால் இவ்வாறு வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மருத்துவ பீடங்களில் கற்பிப்பதற்கான விரிவுரையாளர்கள் இல்லை எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# போலி நாணயத்தாளை பயன்படுத்தி மதுபானம் வாங்க முயன்றவர் கைது!

கொழும்பு, ஜன. 01

பாதுக்க நகரத்தில் உள்ள மதுபானச்சாலை ஒன்றில் 5000 ரூபா போலி நாணயத்தாளை பயன்படுத்தி மதுபானம் வாங்க முயன்ற சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுக்க பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹட்டன் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 36 வயதுடையவராவார்.

சந்தேக நபர் குறித்த மதுபானச்சாலைக்குச் சென்று மதுபானம் வாங்க முயன்றுள்ளார். இதன்போது சந்தேக நபரிடமிருந்த நாணயத்தாள் தொடர்பில் சந்தேகமடைந்த மதுபானச்சாலையின் உரிமையாளர் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாதுக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சுதந்திர தின நிகழ்வுகளை காண்பதற்கு இம்முறை பொதுமக்களுக்கு சந்தர்ப்பம்

கொழும்பு, ஜன. 01

அடுத்த வருடம் தேசிய சுதந்திர தின நிகழ்வுகளைக் காணும் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி, சுமார் 1600 அதிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் மிகப் பிரமாண்டமான முறையில் குறைந்த செலவில் சுதந்திர விழாவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டார். (அ)

# அரசாங்கத்தின் ஆவணங்களைப் பாதுகாப்பாக பேணத்தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்!

கொழும்பு, ஜன. 01

அரசாங்கத்தின் ஆவணங்களை பாதுகாப்பாக பேணத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஆவணங்களை பாதுகாக்கும் விடயத்தில் உண்மையில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அந்த வகையில் அரசாங்க ஆவணங்களை பாதுகாப்பாக பேண தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது. அதேபோன்று அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணைய தளங்களின் மீது மேற்கொள்ளப்படும் சைபர் தாக்குதல்கள் பற்றி அவதானம் செலுத்தப்பட்டு எந்த பக்கத்திலிருந்து இந்த விடயம் இடம்பெறுகின்றது என்பதை அறிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம உத்தியோகத்தருக்கு ஆதரவாக பொதுமக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

## சமூக வலைத்தள பதிவுக்கு கடும் கண்டனம்

மட்டக்களப்பு, ஜன. 01

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பூலாக்காடு கிராம உத்தியோகத்தரை சமூக வலைத் தளமொன்றில் அரச சேவைக்கும் மற்றும் தன்மானத்துக்கும் அவதூறு ஏற்படுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டமையை கண்டித்தும் கிராம உத்தி யோகத்தருக்கு ஆதரவு தெரிவித்தும், கவனவீர்ப்புப் போராட்டமொன்று கிரான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.



இந்தப் போராட்டத்தில் பூலாக்காடு, பெரியவேரம், வட்டிபோட்ட மடு, அம்புஸ் குடா, ஆனசுட்ட பொத்தானை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் ஈடுபட்டனர்.

கிரான் புலிபாய்ந்தகல் வீதியில் ஒன்று கூடிய மக்கள் கையில் எதிர்ப்பு பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஊர்வலமாக பிரதேச செயலக முன்வாயிலை வந்தடைந்தனர்.

“தூண்டாதே தூண்டாதே வன்முறையை தூண்டாதே சமூக வலைத்தளமே“, “நீதி வேண்டும் நீதி வேண்டும், கிராம சேவகருக்கு நீதி வேண்டும்.“ “நிறுத்துங்கள் நிறுத்துங்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதை நிறுத்துங்கள்,“ “பொய்யான தகவல்களை வெளியிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்து என்பன போன்ற கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரிடம் 3 கிராமங்களை சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் கையளித்தனர்.

தங்களது கிராமத்தில் இயங்கும் மாதர் சங்கப் பிரதிநிதிகள் பலவருட காலமாக அந்த அமைப்பில் இயங்கி வருவதாகவும் இவர்கள் கிராம சேவை உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்குரிய பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருவதாகவும், மேலும் அரச சொத்துகளை தாங்கள் கையகப்படுத்தி வைத்திருப்பதுடன் சில நாட்களாக கிராம உத்தியோகத்தரை அவமானப்படுத்தும் செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர். (எ)

# கல்முனை மாநகர ஆணையர் நௌபீஸுக்கு பிரியாவிடை



கல்முனை, ஜன.01

கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளராக இடமாற்றம் பெற்று செல்லும் என். எம். நௌபீஸுக்கான பிரியாவிடை நிகழ்வு மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (எ)

# மகிழூரில் சிறுவர் மகிழ சிறுவர் நூலகம் திறப்பு



மண்முனை, ஜன.01

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட மகிழூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலக வளாகத்தில் சிறுவர் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினத்தின் ஆலோசனைக்கு அமைவாகவும், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரனின், வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ம. புவிதரன், செ. சக்திநாயகம் ஆகியோரின் ஒருங்கிணைப்பு மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் இந்த சிறுவர் நூலகம் உருவாக்கப்பட்டது.

இதனை உதவி பிரதேச செயலா ளர் திருமதி சத்யகௌரி தரணி தரன் திறந்து வைத்தார். (எ)

# மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார் அஷ்ரப் தாஹிர்



நற்பிட்டிமுனை,ஜன. 01

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர், நற்பிட்டிமுனை பிரதேசத்துக்கு வருகை தந்து மக்களின் தேவைகளை கேட்டறிந்து கொண்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நோக்கில் அங்கு வருகை தந்து மக்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்து கொண்டார்.

நற்பிட்டிமுனை பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள், கல்வி ரீதியான செயல்பாடுகள், மதத்தலங்களுக்கான உதவிகள், வாழ்வாதாரத் திட்டங்கள் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதோடு, எதிர்காலத்தில் இவ்வாறான செயல்பாடுகளை துரிதமாக முன்னெடுப்பதாகவும் அஷ்ரப் தாஹிர் எம். பி. வாக்குறுதி வழங்கினார். (எ)

# மாணவர்களுக்கு கொடுப்பனவு வங்கிகளில் குவிந்த பெற்றோர்

கல்முனை, ஜன. 01

அம்பாறை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள கல்வி கற்கும் மாணவர்களுக்கான அஸ்வெசும கொடுப்பனவான 6000 ரூபாய் அரச வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டன.

பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவின் பணிப்புரைக்கமைய மாணவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.


காரைதீவு, சாய்ந்தமருது மக்கள் வங்கி, இலங்கை வங்கிகளில் கணக்கு வைத்திருப்போருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்காக அதிகளவான பெற்றோர்கள் வங்கிகளில் குவிந்தனர். (எ)

# கல்முனையில் புனரமைக்கப்பட்ட 3 வீதிகள் மக்களின் பாவனைக்கு

கல்முனை, ஜன.01

கல்முனை மாநகர சபையால் புனரமைப்பு செய்யப்பட்ட கல்முனை மத்ரஸா வீதி, தைக்கா வீதி மற்றும் நகர மண்டப வீதி என்பன நேற்றுத் திங்கட்கிழமை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸ் தலைமையில் மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், பொறியியலாளர் ஏ. ஜே. ஏ. எச். ஜௌஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி. ரி. எம். நஹீம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.



கடந்த காலங்களில் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட இவ்வீதிகள் கல்முனை மாநகர சபையின் முன்னுரிமைப்படுத்தப்பட்ட துரித நடவடிக்கையால் எல். டி. எஸ். பி. மற்றும் பி. எஸ். டி. ஜி. திட்டங்களின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டன. (எ)

# சீனாவின் உதவியுடன் நிவாரணம் வழங்கல்

மட்டக்களப்பு, ஜன.01

மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு சீன அரசாங்கத்தின் உதவியுடன் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஜே. ஜே. முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. இலங் கைக்கான சீனத் தூதுவர் குயி சிகங் ஹொங் உள்ளிட்ட விருந் தினர் கள் கலந்து கொண்டு மக்களுக்கு நிவாரணப் பொருட் களை வழங் கினர். இதன் போது [illegible]



மாக 100 பேருக்கு 6500 ரூபாய் பெறு மதி யான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றுக்குள் கவிழ்ந்து லொறி கோர விபத்து!

## திருமண நிகழ்வுக்கு சென்ற 66 பேர் உயிரிழப்பு!

அடிஸ் அபாபா, ஜன.01

**திருமண நிகழ்வுக்கு சென்றுகொண்டிருந்த லொறி திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 66 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் எதியோப்பியாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**

தெற்கு எதியோப்பியாவின் சிடாமா பகுதியில் திருமண நிகழ்வுக்காக லொறி ஒன்றில் 70இற்கும் மேற்பட்டோர் சென்று கொண்டிருந்தனர். ஆற்றுப்பாலத்தில் பயணித்த போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி, எதிர்பாராதவிதமாக ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 64 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், சிலர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இருவர் உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை 66 ஆக அதிகரித்தது. இந்த விபத்து தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

எதியோப்பியாவில் கிராமப்புற பகுதிகளில், திருமணங்கள் போன்ற நிகழ்வுகளுக்கு பேருந்துகளை வாடகைக்கு எடுப்பதற்குப் பதிலாக லொறிகளை வாடகைக்கு அமர்த்துவதை மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஏனெனில் அவை குறைந்த கட்டணத்தில் கிடைப்பதாலும், பலரை ஏற்றிச் செல்ல முடிவதாலும், கலாசார ரீதியாக மக்கள் இவ்வாறு பயணம் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# குற்றவாளிகள் அச்சுறுத்தல் டிரினிடாட்டில் அவசர நிலை

## டிசெம்பரில் மட்டும் 61 பேர் கொலை

போர்ட் ஒப் ஸ்பெயின், ஜன.01

கொலை, கொள்ளை, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களின் அச்சுறுத்தல் காரணமாக டிரினிடாட்டில் அவசர நிலை பிரகடனம் செயயப்பட்டுள்ளது.


தென் அமெரிக்கக் கண்டத்தில் இரு தீவுகளைக் கொண்ட நாடு டிரினிடாட் மற்றும் டொபாகோ குடியரசு.

இந்த நாட்டில் குற்றவியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன. அன்றாடம் பெருகிவரும் குழு மோதல் சம்பவங்களால் பொது மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். அந்த நாட்டுப் பிரதமர் கேத் ரொவ்ளி வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாட்டில் பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் குற்றங்கள் அதிகரித்துள்ளன. தேசிய பாதுகாப்பு சபைக்கு டிரினிடாட் மற்றும் டொபாகோ பொலிஸ்துறையினர் வழங்கிய அறிவுரையின் பேரில் பொது அவசர நிலை பிரகடனம் செய்யப்படுகிறது. அடுத்த இரண்டு நாட்களுக்கு பொலிஸ் துறையினர் நாடு முழுவதும் அதிரடி சோதனையில் ஈடுபட்டு பிடியாணை இல்லாமல் கூட குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை கைது செய்வர்"- எனத் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மட்டும் அந்த நாட்டில் 61 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஆண்டு முழுவதும் 623 கொலைகள் அரங்கேறின என்று அதிர்ச்சி அறிக்கை வெளியாகியுள்ளது. (எ)

# உலகின் அதிவேக ரயிலை அறிமுகம் செய்தது சீனா

## மணிக்கு 450 கி.மீ. பயணித்து சாதனை




பீஜிங், ஜன.01

மணிக்கு 450 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் உலகின் அதிவேக ரயிலை சீனா அறிமுகம் செய்துள்ளது.

இந்த வகை ரயில்களுக்கு மேம்படுத்தப்பட்ட 'சி. ஆர். 450' புல்லட் ரயில் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த புல்லட் ரயிலானது நவீன தொழில்நுட்பங்களுடன் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனால், நகரங்களுக்கு இடையிலான பயண நேரம் வெகுவாக குறையும் என்று சீனா தெரிவித்துள்ளது. (எ)

# தென்கொரிய ஜனாதிபதியை கைது செய்ய அதிரடி உத்தரவு

## அவசர நிலையால் வந்த வினை

சியோல், ஜன.01

தென்கொரியாவில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதியை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்த நாட்டில் ஜனாதிபதியாக செயல்பட்டு வந்தவர் யூன் சுக் இயோல். இவர் கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அவசர நிலை உத்தரவை ஜனாதிபதி திரும்பப் பெற்றார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு



வந்தன. வாக்கெடுப்பின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி பதவியில் இருந்து யூன் சுக் இயோல் நீக்கப்பட்டார். இதையடுத்து பிரதமராக செயல்பட்டு வந்த ஹாங் டக் சோ அந்த நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவர் மீதும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து, துணை பிரதமராக செயல்பட்டு வந்த சோய் சங் மோக் தென்கொரியாவின் இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் அவரச நிலையை பிரகடனப்படுத்தி கிளர்ச்சிக்கு நிகரான குற்றச் செயலில் ஜனாதிபதி யூன் சுக் இயோல் ஈடுபட்டாரா? என்பது குறித்து மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறது. இது தொடர்பான வழக்கும் சியோலில் உள்ள மாவட்ட நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியதற்காக பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# 2024இல் 10 பேரிடர்களில் 2,000 பேர் உயிரிழந்தனர்

## இந்தியா இடம்பெறவில்லை?

வாஷிங்டன், ஜன.01

2024ஆம் ஆண்டில் உலகில் இடம்பெற்ற 10 பேரிடர் சம்பவங்களில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மேலும், 288 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்று ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டியன் எய்ட் என்ற அரசு சாரா அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், பருவநிலை மாற்றங்களால் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் பேரழிவுகள் ஏற்படுகின்றன.

2024ஆம் ஆண்டில் மிகப் பெரிய பேரழிவுகள் ஏற்படவில்லை என்றாலும், வட அமெரிக்காவில் 4, ஐரோப்பிய நாடுகளில் 3 பேரழிவுச் சம்பவங்கள் நடந்தன. மீதமுள்ள 3 பேரழிவுச் சம்பவங்கள் சீனா, பிரேசில், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு இந்தியாவின் கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட பேரழிவுச் சம்பவம் இந்த அறிக்கையில் இடம்பெறவில்லை.

கடந்த ஜூலை யில் நடந்த இந்த பேரழிவுச் சம்பவத்தில் 200இற்கும் மேற் பட்டோர் உயிரிழந்தனர். (எ)

# வெவ்வேறு வீதி விபத்துகளில் 18 பேர் பலி, 35 பேர் படுகாயம்

இஸ்லாமாபாத், ஜன.01

பாகிஸ்தானின் பஞ்சாப், சிந்து மாகாணங்களில் இடம்பெற்ற வெவ்வேறு வீதி விபத்துகளில் சிக்கி 18 பேர் உயிரிழந்தனர். 35 பேர் படுகாயமடைந்தனர்.

பஞ்சாப் மாகாணத்திலிருந்து இஸ்லாமாபாத்தின் பகவால்பூர் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்து, பதே ஜங் என்ற பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். பெண்கள் உட்பட 22 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்துக்கு சாரதியின் அலட்சியமே காரணம் என போக்குவரத்து துறை பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையில், சிந்து மாகாணம் நவுஷ ஹ்ரோ பெரோஸ் மாவட்டத்தில், மோரோ அருகே ஒரு லொறியும், வானும் நேருக்கு நேர் மோதியதில் எட்டுப் பேர் பலியாகினர். மேலும், 13 பேர் படுகாயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.(எ)

# பெண்கள் வசிக்கும் வீடுகளில் ஜன்னல் வைக்க தலிபான் தடை

காபூல், ஜன.01

ஆப்கானிஸ்தானில் பெண்கள் வாழும் வீடுகள் பயன்படுத்தும் பொது இடங்களில் உள்ள ஜன்னல்களுக்கு தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

இதன்படி, புதிதாக கட்டப்படும் வீடுகளில் பெண்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களில் ஜன்னல்கள் வைக்கக் கூடாது. மேலும், தற்போது உள்ள ஜன்னல்களை அடைக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் கடந்த 2021இல் வெளியேறின. இதன் பின்னர் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அப்போது பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும் என்றும், உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்றும் தலிபான்கள் உறுதியளித்தனர். ஆனால், அந்த அறிவிப்புக்கு மாறாகவே அவர்களது செயல்பாடுகள் இதுவரை இருந்து வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

மெல்பேர்ண், ஜன.01

இந்தியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டியில் 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

இரு அணிகள் இடையிலான பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் 4ஆவது போட்டி கடந்த 26ஆம் திகதி தொடங்கியது. பொக்ஸிங் டே என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 474 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து களமிறங்கிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 369 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதனால், 105 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலியா 234 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் இந்தியாவுக்கு 340 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

ஆட்டத்தின் கடைசி நாளான நேற்று முன்தினம் 340 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது. ஆனால், அவுஸ்திரேலிய அணியின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இந்தியா அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து தடுமாறியது.

ரோஹித் சர்மா 9 ஓட்டங்களிலும், கே. எல். ராகுல் ஓட்டம் எதுவும் எடுக்காமலும், விராட் கோலி 5 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். சிறிது நேரம் தாக்குப்பிடித்து விளையாடிய ரிஷப் பண்ட் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து



களமிறங்கிய ஜடேஜா 2 ஓட்டங்களிலும், நிதிஷ் குமார் ஓர் ஓட்டத்திலும், ஆகாஷ் தீப் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மறுபுறம் நிதானமாக விளையாடி வந்த ஜெய்ஸ்வால் 84 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்தியா 79.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 155 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் மூலம் அவுஸ்திரேலியா 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2 - 1 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி ஜனவரி 3ஆம் திகதி சிட்னியில் தொடங்குகிறது. (எ)

## டெஸ்ட்டில் அதிக விக்கெட் அஸ்வினை முந்திய லயன்

மெல்பேர்ண், ஜன.01


டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் நாதன் லயன் 538 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வினின் சாதனையை லயன் முறியடித்துள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி உலகின் மிகப் பெரிய மைதானங்களில் ஒன்றான மெல்பேர்ணில் கடந்த 26ஆம் திகதி தொடங்கியது.

இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான நாதன் லயன் இரு இன்னிங்ஸிலும் சேர்த்து மொத்தம் 5 விக்கெட்கள் கைப்பற்றினார்.

இதன் மூலம் அவர் கைப்பற்றிய விக்கெட்களின் எண்ணிக்கை 538 ஆக அதிகரித்தது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிக விக்கெட்கள் கைப்பற்றிய பந்துவீச்சாளர்களின் வரிசையில் 7ஆவது இடத்தில் இருந்த இந்தியாவின் அஸ்வினை பின்னுக்கு தள்ளியுள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு, 1. முத்தையா முரளிதரன் - 800 விக்கெட்கள்(இலங்கை), 2. ஷேன் வோர்ன் - 708 விக்கெட்கள்(அவுஸ்திரேலியா), 3. ஜேம்ஸ் ஆண்டர்சன் - 704 விக்கெட்கள்(இங்கிலாந்து), 4. அனில் கும்ப்ளே - 619 விக்கெட்கள்(இந்தியா), 5. ஸ்டூவர்ட் பிராட் - 604 விக்கெட்கள்(இங்கிலாந்து), 6. கிளென் மெக்ராத் - 563 விக்கெட்கள்(அவுஸ்திரேலியா), 7. நாதன் லயன் - 538 விக்கெட்கள்(அவுஸ்திரேலியா), 8. ரவிச்சந்திரன் அஸ்வின் - 537 விக்கெட்கள்(இந்தியா) 9. கர்ட்னி வால்ஷ் - 519 விக்கெட்கள்(மேற்கு இந்திய தீவுகள்) ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (எ)



## பிரிஸ்பேன் ரென்னிஸில் ஜோகோவிச் ஜோடி வெற்றி



பிரிஸ்பேன், ஜன.01

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் தொடரில் ஜோகோவிச் ஜோடி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் செர்பியாவின் ஜோகோவிச் - அவுஸ்திரேலியாவின் நிக் கிரியாசு ஜோடி, அவுஸ்திரியாவின் அலெக்சாண்டர் எரியர் - ஜேர்மனியின் ஆன்ரியாஸ் மியாசு ஜோடியுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஜோகோவிச் ஜோடி 6 - 4, 6 (4) -7(7), 10 - 8 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. இதனால், ஜோகோவிச் ஜோடி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (எ)

## ஆஸி ரென்னிஸ் தொடரிலிருந்து சிமோனா ஹாலெப் விலகினார்


பிரிஸ்பேன், ஜன.01

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் இருந்து ருமேனியாவின் சிமோனா ஹாலெப் விலகுவதாக அறிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் அடுத்த மாதம் (ஜனவரி) 12ஆம் திகதி தொடங்கி 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான தகுதி சுற்று ஜனவரி 6 முதல் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இந்தத் தொடரிலிருந்து 2 "கிராண்ட்ஸ்லாம்" பட்டங்கள் வென்றவரும், முன்னாள் "நம்பர் 1" வீராங்கனையுமான ருமேனியாவின் சிமோனா ஹாலெப் விலகுவதாக அறிவித்துள்ளார்.

கால்முட்டி மற்றும் தோள்பட்டை வலியால் அவதிப்படும் அவர் இந்தத் தொடரிலிருந்து முழுமையாக மீளாததால் இந்த முடிவை எடுத்துள்ளார். (எ)



## ஆப்கானிஸ்தான் - சிம்பாவே முதலாவது டெஸ்ட் சமனானது

புலவாயோ, ஜன.01

ஆப்கானிஸ்தான் - சிம்பாவே அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்தது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புலவாயோவில் நடந்தது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே 586 ஓட்டங்கள் குவித்தது. சீன் வில்லியம்ஸ் 154, பிரையன் பென்னெட் 110, எர்வின் 104 ஓட்டங்கள் குவித்தனர். பின்னர் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய ஆப்கானிஸ்தான் 3ஆவது நாள் முடிவில் 125 ஓவர்களில் 2 விக்கெட்கள் மட்டும் இழந்து 425 ஓட்டங்கள் குவித்தது. ரஹ்மத் ஷா 231 ஓட்டங்களுடனும், ஷகிடி 141 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த நிலையில் 4ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. இதில் இரட்டை சதம் அடித்து அசத்திய ரஹ்மத் ஷா 234 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த நிலையில், 3 விக்கெட்கள் மட்டும் இழந்து 515 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை பெய்தது. இதனால் ஆட்டம் தடைப்பட்டது. மழை நின்ற பின்னர் ஆட்டம் தொடங்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், மழை தொடர்ந்து பெய்ததன் காரணமாக 4ஆம் நாள் ஆட்டம் அத்துடன் முடிக்கப்பட்டது.

5ஆம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முதல் இன்னிங்ஸில் 699 ஓட்டங்கள் குவித்தது. இந்த நிலையில், சிம்பாவே அணி 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 142 ஓட்டங்கள் எடுத்தபோது இரண்டு அணிகளின் தலைவர்களும் போட்டியை அத்துடன் முடித்துக் கொள்ள முடிவு செய்தனர். இதனால் போட்டி வெற்றி தோல்வியின்றி சமனில் முடிந்தது. (எ)

## 13 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா முதல் தோல்வி

மெல்பேர்ண், ஜன.01

மெல்பேர்ண் மைதானத்தில் 13 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா முதல் தோல்வியை சந்தித்துள்ளது.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மெல்பேர்ணில் நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலியா 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இது, மெல்பேர்ண் மைதானத்தில் 13 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா சந்தித்த முதல் தோல்வியாகும். இதற்கு முன்னர் இந்திய அணி இங்கு கடைசியாக விளையாடிய 3 டெஸ்ட்களில் 2இல் வெற்றியும், ஒன்று சமனில் முடிந்தது.

இந்த நிலையில் பொக்ஸிங் டே டெஸ்ட் போட்டியில் ஏற்பட்ட தோல்வியால் மெல்பேர்ணில் இந்தியாவின் 13 ஆண்டு கால வெற்றிப் பயணம் முடிவுக்கு வந்தது இந்திய கிரிக்கெட் அணி இரசிகர்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்: தென்னாபிரிக்க அணி தகுதி

செஞ்சூரியன், ஜன. 01

உலக டெஸ்ட் கிரிக்கெட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்க அணி தகுதி பெற்றுள்ளது.



செஞ்சூரியனில் பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முதல் அணியாக அந்த அணி முன்னேறியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2025...

குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கிட்டுச் சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காக 2025 ஜனவரி 09ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைய 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு-செலவுத்திட்ட உரை) பெப்ரவரி 17ஆம் திகதி இடம்பெறவிருப்பதுடன், இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் பெப்ரவரி 25ஆம் திகதி வரை 7 நாட்கள் இடம்பெறவுள்ளன. அத்துடன் பெப்ரவரி 25ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் குறித்த குழுநிலை விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21ஆம் திகதி வரை 4 சனிக்கிழமை நாட்கள் உள்ளடங்கலாக 19 நாட்கள் இடம்பெறவுள்ளன. இதற்கான வாக்கெடுப்பை மார்ச் 21ஆம் திகதி பி.ப 6.00 மணிக்கு நடத்துவதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

வரவு செலவுத்திட்ட காலப்பகுதியில் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரையான நேரம் 5 வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 10.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரையான காலப் பகுதியில் வரவுசெலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்.

வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்களான பெப்ரவரி 25 மற்றும் மார்ச் 21ஆம் திகதிகள் தவிர ஏனைய அனைத்து நாட்களிலும் பி.ப 6.00 மணி முதல் பி.ப 6.30 மணிவரையான காலப் பகுதி சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். (அ)

## புலிகளால்...

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்ச தனியாகவா யுத்தம் செய்தார்? நாம் யுத்தம் செய்யவில்லையா? யுத்தத்துக்கு தலைமை தாங்கிய இராணுவத் தளபதியான எனது முழுமையான பாதுகாப்பை 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வெளியாகுவதற்கு முன்னரே நீக்கினர். அப்போது எனக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

வெலிகடைச் சிறையில் என்னை அடைத்த தருணத்தில் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதியொருவர் சிறையில் இருந்தார். அத்தருணத்தில் எனக்கு எவ்வித விசேட பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. பின்னர் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்த தருணத்தில் இராணுவத் தலைமையகத்தில் என் மீது தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்த வந்திருந்த முரிஸ் என்ற தீவிரவாதியும் நானும் ஒரே பங்கில்தான் அமர்ந்திருந்தோம். அப்போது எனக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருக்கவில்லையா?

அதனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு எப்போதும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள். மகிந்த, பிரபாகரனுடன் சமதான பேச்சுகளை நடத்தி யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவதாகவே ஆட்சிக்கு வந்தார். போர் முடிவதற்கு 3 மாதங்கள் இருந்த தருணத்தில் போர் நிறுத்ததை அறிவித்தார். பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பித்துச் செல்லவே அவர் அந்த நடவடிக்கையை எடுத்திருந்தார்.

போர் நிறுத்த அறிவிப்பு காரணமாக மூன்று மாதங்கள் போர் பின்நோக்கிச் சென்றதுடன், இராணுவத்தினரும் 5 கிலோ மீற்றர் நோக்கிச் செல்லும் நிலை ஏற்பட்டது. மகிநத் ராஜபக்ஷ புலிகளுடன் நெருங்கிய உறவை அவர் பேணியிருந்தார். அதனால் புலிகளால் அவரது உயிருக்கு ஆபத்து இல்லை - என்றார். (அ)

## மோகதாஸ்...

இரவு' என்ற நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது. 2025 புது வருடத்தை வரவேற்கும் முகமாக நடைபெறும் இந்த நிகழ்வு நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு நகரில் உள்ள தனியார் பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கையில் வருடம் 365 நாட்களும் மூன்று வேளை உணவளிப்பது மட்டுமன்றி, ஆதரவற்ற உறவுகளுக்கு ஆதரவளித்து அவர்களை பராமரிப்பதுடன் சமூக மட்டத்தில் வசதியற்ற குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் மருத்துவம், கல்வி, வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக தொண்டுகளை ஆற்றித் தனிப்பெரும் தகைமையாளராக வாழும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு சாதனை தமிழன் 2024 விருது வழங்கப்பட்டது.

அவருக்கான சாதனைத் தமிழன் விருதை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வழங்கிவைக்க, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் மலர்மாலை அணிவிக்க, டான் குழுமத் தலைவர் எஸ்.எஸ்.குகநாதன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீநேசன், ஸ்ரீநாத், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் லலீசன், அரசியல் கட்சி முக்கியஸ்தர்கள், வர்த்தக பிரமுகர்கள், கல்வியியலாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## சிவப்பரிசி...

செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அரிசி தட்டுபாடு தொடர்பில் கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர்களுக்கு பதில் அளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

"நாட்டில் அரிசிக்கு நிலவிய தட்டுப்பாடு காரணமாகவே அரிசி இறக்குமதிக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியது. அரிசி இறக்குமதிக்கான கால எல்லை டிசம்பர் 30ஆம் திகதி முதல் ஜனவரி 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரை 77 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 11 ஆயிரம் மெற்றிக் தொன் துறைமுகத்தில் உள்ளது. அவையும் நாளை அல்லது நாளை மறுதினம் விடுக்கப்படும்.

குறிப்பிடத்தக்களவு அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. என்றாலும், அவற்றை விநியோகிக்கும் பொறிமுறையில் சில பிரச்னைகள் இருக்கலாம். குறிப்பாக சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு உள்ளது. அந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்படும்.

ஜனவரி நடுப்பகுதியில் உள்நாட்டு விவசாயிகளின் அரிசி சந்தைக்கு கிடைக்கப்பெறும். அந்த விடயத்தையும் கவனத்தில் கொண்டுதான் நாம் தீர்மானங்களை எடுத்து செயல்பட்டு வருகிறோம். அரிசி இறக்குமதி செய்யப்பட்டு அவற்றை முறையாக விநியோகிகும் பொறிமுறையொன்றை பேண எதிர்பார்ப்பதுடன், சதொசவில் குறிப்பிடத்தக்களவு அரிசியை கையிருப்பில் வைத்திருக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவற்றுக்கு மத்தியில் உள்நாட்டு விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அரிசி விலையை பேணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த போகத்தில் இருந்து விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும். அரிசிக்கான வரி குறைக்கப்படாமைக்கான காரணம் உள்நாட்டு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே. வரி குறைப்பு செய்தால் உள்நாட்டு விவசாயிகளுக்கு குறைந்த விலையில் நெல்லை வழங்க முடியாது-என்றார். (அ)

# கொழும்பில் நேற்று முதல் விசேட பாதுகாப்பு திட்டம்!

கொழும்பு, ஜன. 01

கொழும்பு நகரில் நேற்று முதல் எதிர்வரும் 2ஆம் திகதி வரை விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி பாதுகாப்பு பணிகளுக்காக 6000 இற்கும் அதிகமான பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக, புலனாய்வு அதிகாரிகளும் இதற்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் புத்தாண்டுயிட்டு , கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அதிகமாக பயணம் மேற்கொள்வதால் அவர்களின் பாதுகாப்பிற்காக இந்த பாதுகாப்பு திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## வவுனியாவில்...

செலுத்தினார்.

அவ்வேளை சைக்கிளில் பயணித்த இரண்டு சிறுவர்கள் வீதியை ஊடறுக்க முற்பட்டபோது பஸ்ஸூடன் மோதி விபத்துக்குள்ளானார்கள்.

இதில் சைக்கிளில் பயணித்த 7 வயதுடைய அப்துல் மஜித் உமர் என்ற சிறுவன் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் உளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (அ)

## மகளை...

மோட்டார் சைக்கிளை எடுத்துள்ளார். இதன்போது அவருக்கு உடல் சுகயீனம் ஏற்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிளை விட்டு வந்து கதிரையில் இருந்தவேளை மயக்கமடைந்துள்ளார்.

இந்நிலையில் அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். சடலம் மீது உடற்கூற்று பரிசோதனை மேற்கொள் வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-05)

## முன்கூட்டி...

இழப்பீடாக செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் தாக்கல் செய்த நான்கு அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்த யசந்த கோதா கொட, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த தீர்ப்பை அறிவித்துள்ளது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் மூன்று கேள்விகள் முன்கூட்டியே வெளியிடப்பட்டதன் காரணமாக, அந்த மூன்று பரீட்சையில் தோற் றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவச மதிப்பெண்கள் வழங்குவதற்கு அர்சாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தால் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இதனூடாக, தங்களின் அடிப் படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு ஒன்றை வழங்கு மாறு கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (அ)

## உயர்தரப்...

கூறினார்.

மதிப்பீட்டு செயல்முறை குறித்து கருத்து வெளியிட்ட அமித் ஜயசுந்தர, "மாணவர்களின் தொடர்ச்சியான படிப்புகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் வகையில், மதிப்பீட்டு நடவடிக்கைகளை நடத்துவதற்கான ஒரு கட்ட அணுகுமுறையை செயல்படுத்தியுள்ளோம்" - என்றார்.

உயர்தரப் பரீட்சை முடிவுகளை இறுதி செய்வதற்கான நிலையான செயல்முறைக்கு பொதுவாக நான்கு மாதங்கள் எடுக்கும் என்று குறிப்பிட்ட அவர், அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எங்கள் நோக்கம் ஏப்ரல் மாதத்திற்குள் முடிவுகளை வெளியிடுவதாகும். மேலும் மதிப்பீட்டிற்குத் தேவையான நேரத்தை குறைக்க நாங்கள் முயற்சி செய்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## அரசாங்க...

அரச சேவையில் மக்களை விளைத்திறனுடனும் வினைத்திறனுடனும் ஈடுபடுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு.

அரசாங்க உத்தியோகத்தர்களை குறைப்பது தொடர்பிலான எந்தவொரு எதிர்பார்ப்பும் இல்லை.

சுகாதார அமைச்சின் கீழ்நிலையில் உள்ள பெரும்பாலான ஆட்சேர்ப்புகள் சேவை தேவைகளை விட அரசியல் தேவைகளுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன

எவ்வாறு ஆட்சேர்ப்பு நடந்தாலும், அரசுப் பணியில் இணைந்து அதன் மூலம் வாழ்க்கையைத் திட்டமிட்டு, சிலர் வங்கிக் கடன் பெற்றிருக்கி றார்கள்.

ஆனால் அவர்களுக்காக அரசாங்கம் அதிக பணம் செலவிடுகிறது. பொது சேவையானது பொதுமக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்க நிர்வகிக்கப்படுகிறது. அரசு சேவை மிகவும் சுமையாக உள்ளது, அதற்காக அரச ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்பது அர்த்தமல்ல - என்றார். (அ)

## ஊடகங்களுக்கு...

அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

தமது கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை அமைச்சரிடம் முன்வைப்பதற்கும் பல கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்குமான நோக்கில் இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சங்கத்தை பாதிக்கும் வகையில் தற்போது வரைவுசெய்யப்பட்டுள்ள சட்டமூலம் மற்றும் நடைமுறையிலுள்ள சட்டங்களில் உள்ள சில குறைபாடுகள் தொடர்பில் அமைச்சருக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஊடகங்களும் அரசாங்கமும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமென அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுவதாகவும் ஊடகங்கள் மீது தணிக்கை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இலங்கையில் வெகுஜன ஊடக அமைச்சு பொறுப்பற்ற, செயலிழந்த இடமாக மாற்றப்பட்டுள்ளதால் வெகுஜன ஊடக அமைச்சை சரியான இடத்திற்கு கொண்டுசெல்வதே தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் என அமைச்சர் கூறினார்.

ஊடகங்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்படக்கூடிய சூழலை உருவாக்கி ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் அதிகாரிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# விவசாயிகளுக்கு 1 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டும்!

## மகிந்த அமரவீர கோரிக்கை



கொழும்பு, ஜன. 01

**விவசாயிகளுக்கு இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்காக வழங்கப்பட்ட 40,000 ரூபா இழப்பீட்டுத் தொகையை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு எமது அரசாங்கத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனை நடைமுறைப்படுத்த தற்போதைய அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என் முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விவசாயிகள் இந்த அரசாங்கத்தில் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். 2018ஆம் ஆண்டு நான் விவசாய அமைச்சராக பதவியேற்றபோது வழங்கப்பட்ட 40,000 ரூபா கொடுப்பனவே தற்போதும் வழங்கப்படுகிறது. இது தற்போதைய அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என செய்தியும் வெளியிடப்பட்டது.

இந்த அரசாங்கத்துக்கு உர மானியத்தைக் கூட வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது அரசாங்கத்தில் உர மானியம் 15,000 ரூபாவிலிருந்து 25,000 ரூபா வரை அதிகரிக்கப்பட்டது - என்றார். (அ)

# முதலாம் தர மாணவர்களுக்கு ஜனவரி 30 பாடசாலை ஆரம்பம்

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

கொழும்பு, ஜன. 01

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற சகல பாடசாலைகளிலும் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள முதலாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்பித்தல் செயல்பாடுகள் இம்மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு கல்வி அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது. அதற்கமைய அனைத்து சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரச பாடசாலைகளின் புதிய தரம் ஒன்று மாணவர்களுக்கு ஜனவரி 30 ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை விடுமுறையின் பின்னர் நாளை வியாழக்கிழமை மீள பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. சகல பாடசாலைகளிலும் மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி, எதிர்வரும் 24ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

இதேவேளை இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் 2025 மார்ச் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். பரீட்சை நேர அட்டவணை என்பதை விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# புதிய ஆண்டு வடமாகாண மக்களுக்கு முன்னேற்றத்தைக் கொண்டு வரட்டும்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜன. 01

புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்களுக்கு ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும்.

புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல எங்கள் சிந்தனைகளை புதுப்பித்தலுக்கான தருணமும் கூட.

இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் 'முறைமை மாற்றத்தை' நாம், எம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்கவேண்டும் என்று விரும்புகின்றேன்.



எங்கள் நிர்வாகத்தின் முதுகெலும்பாக, மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் - அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவதிலும் அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பும் தொழில்முறையும் மிக முக்கியமானவை. நேர்மை, செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வோடு உங்கள் விலைமதிப்பற்ற சேவைப் பங்களிப்புகளைத் தொடர வேண்டும் என அன்புரிமையுடன் கோருகின்றேன். பொதுச் சேவையில் மிக உயர்ந்த தரங்களை நிலை நிறுத்த நாங்கள் ஒன்றாகப்பாடுபடுவோம். எங்கள் மக்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைப்போம்.

புதிய ஆண்டிலிருந்து எங்கள் பொதுச்சேவையை அன்பானதும், விரைவானதும், தரமானதுமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதிபூண்டு 'முறைமை மாற்றத்தை' ஆரம்பிப்போம்.

இந்த ஆண்டை எமது மாகாணத்துக்கு, ஒரு குறிப்பிடத்தக்க இலக்கை அடைவதற்கான ஆண்டாக மாற்ற, அரசியல் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் - அரச பணியாளர்கள் - மக்கள் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிப்போம் - என்று கூறியுள்ளார். (அ)

# அரச அச்சக அதிபராக கே.பி.ஜி. புஸ்பகுமார!

கொழும்பு, ஜன. 01

அரச சேவை ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்கும் பணியாளர்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குமான குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை, சேவை அவசியத்துக்கு ஏற்ப ஆளணியை மீளமர்த்தி உச்சளவு சேவையைப் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அரச சேவையிலுள்ள பணியாளர்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய பாதீட்டு திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராகச் செயற்பட்ட நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி கே.பி.ஜி புஸ்ப குமாரவை, அரச அச்சகமா அதிபராக நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச அச்சகமா அதிபராகப் பதவி வகித்த கங்காணியலாகேவின் சேவைக்காலம் கடந்த 24 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், அந்த பதவிக்கு கே.பி.ஜி புஸ்பகுமாரவை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# ரயில் இருக்கைகளை முன்பதிவு செய்ய அடையாள அட்டை இலக்கம் அவசியம்!

கொழும்பு, ஜன. 01

ரயில் இருக்கைகளை முன்பதிவு செய்யும் போது பயணிகள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தை உள்ளிட வேண்டும் என இலங்கை ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில் நிலையத்திற்குள் உட்பிரவேசிக்கும் போதும், ரயிலினுள் அனுமதி சீட்டுகளை சரிபார்க்கும் போதும், அனுமதி சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை எண் அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ஆகியவற்றை சரிபார்த்து உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளுக்கான பயணச்சீட்டு பணத்தைத் திரும்பப் பெற விண்ணப்பிக்கும்போது பயணச்சீட்டு உரிமையாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்த பயணிகளின் தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டின் நகலை ரயில் நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் நிலையத்தில் தீ!

கொழும்பு, ஜன. 1

வெயாங்கொடை பொலிஸ் நிலையத்தில் உள்ள அறை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தின்போது, குறித்த அறையிலிருந்த புத்தகங்கள் மற்றும் பழைய ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, பொலிஸ் நிலையத்தினுள் உள்ள போக்குவரத்து பிரிவு, சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பணியகம் ஆகியவற்றின் அறைகளில் உள்ள ஜன்னல்கள், கதவுகள் மற்றும் புத்தகங்களில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தின்போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் கூறினர். (அ)

# சுனிலின் பெயரைப் பயன்படுத்தி மோசடி; சந்தேக நபர்களை கைதுசெய்ய உத்தரவு!

கொழும்பு, ஜன. 01

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியின் பெயர் மற்றும் படத்தைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டினை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் மொஹமட் ரிஸ்வான் நேற்று முன் தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளுக்காக சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களின் வங்கிக் கணக்கு பதிவேடுகளை சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சில குழுக்கள் வட்ஸ்-அப் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிப்பவர்களிடம் தமது பெயர் மற்றும் படத்தைப் பயன்படுத்தி பணம் வசூலித்ததாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org